செ.வெ.எண்: 21/ ஜனவரி நாள்:13.01.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**முன்னாள் படைவீரர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி குறித்த கருத்தரங்கு 27.01.2016 அன்று நடைபெறவுள்ளது**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

தமிழ்நாடு திறன்பயிற்சி வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் முன்னாள் படைவீராகளின் மறுவாழ்விற்காகவும் அவர்களின் மறுவேலைவாய்ப்பிற்காகவும் ஏற்ற வகையில் பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. சிறப்பு சுயதொழில் / திறன் மேம்பாட்டு பயிற்சி குறித்த கருத்தரங்கு 27.01.2016 அன்று பிற்பகல் 3.00 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது. எனவே, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்கள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**